செய்தி வெளியீடு எண்: 502 நாள்: 27.07.2018

## செய்தி வெளியீடு

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ,கல்வி இறுதியாண்டு படிக்கும் மாணவர்களுக்கு தொழில் முனைவோர் ஆவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக தமிழ் நாட்டில் உள்ள 88 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் மூலம் விழிப்புணர்வை நடத்துவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

வேலைவாய்ப்பை உருவாக்குவதன் முதற்கட்டமாக, அரசு கலைக் கல்லூரிகளில் இறுதியாண்டு படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களை, தொழில் முனைவோராக முறப்படுத்தும் வகையில், தொழில் முனைவதற்கான மூன்றாவது விழிப்புணர்வு நிகழ்ச்சி, மாநிலக் கல்லூரி, சென்னை -5ல், தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தால் 27.7.2018 வெள்ளி கிழமை அன்று நடத்தப் பட்டது. இவ்விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் திரு.ஆர்.இராவணன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் பற்றியும் மாணவர்களை தொழில் முனைவோராக உருவாக்க செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றியும் , நிறுவனத்தின் பயிற்சி ஒருங்கிணைப்பாளர் திரு.அ.டேனியல் பிரேம்நாத் அவர்கள் உரை நிகழ்த்தினார். இவ்விழாவின் தலைமை உரையாக, முனைவர் **வெ.இறையன்பு, இ.ஆ.ப.**, அரசின் முதன்மை செயலாளர் / இயக்குனர், தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் அவர்கள், மாணவர்கள் வேலை தேடுவதை விட, வேலை வாய்ப்பை உருவாக்குபவர்களாக வர வேண்டும் என்றும், மாணவர்கள் தொழில் முனைவோர் ஆவதற்கான வழிகள், புத்தாக்க எண்ணங்கள் பற்றியும், மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாக பேசினார். இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில், டாக்டர்.திருமதி.ரா.சாருமதி, கல்லூரி கல்வி இயக்குநர் அவர்கள் மாணவர்கள் தொழில் முனைவோர் ஆவதற்கு ஊக்குவிக்கும் விதமாக சிறப்புரை ஆற்றினார். டாக்டர்.ஞ.கூ.தேவராஜன் , இயக்குநர், IQAC, அரசு மாநில கல்லூரி அவர்கள் நன்றியுரையாற்றினார்.

இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில், அரசு மாநில கல்லூரி சென்னை -5ல் 100 மாணவர்கள் பங்கேற்று பயன்பெற்றார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**